**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**

**நாள். 03.11.2025.**

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>**

**<u>அசல் வழக்கு எண். 53/2019</u>**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 03-ம் நாள் திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இலட்சுமி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | பாலகிருஷ்ணன் | வயது | : | 56 |
| ஊர் | : | உக்கல், பெண்டை கிராமம் | தொழில் | : | இல்லத்தரசி |

**<u>பி.சா. 1 (இலட்சுமி): வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1. வழக்கு சொத்தில் நான் கட்டியுள்ள வீடு 6, 7 வருடங்களுக்கு முன்னிருக்கும் என்று சொன்னால் 10, 12 வருடங்கள் இருக்கும். அவ்வாறு நான் 10, 12 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் உள்ளது. தாக்கல் செய்தேனா என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. வாதி விஜயாவின் கணவர் இறந்தபிறகு அவர் வெளியூருக்கு சென்று சுமார் 10, 12 வருடங்கள் இருக்குமா என்றால் 40 வருடம் ஆகிறது. அவ்வாறு 40 வருடம் என்று எப்படி சொல்கிறேன் என்றால் நான் வழக்கு சொத்து உள்ள ஊருக்கு வந்து 36 வருடங்கள் ஆகிறது. அதனால் எனக்கு தெரியும். நான் சொல்வது பொய் என்றும் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு சர்வேயருடன் வந்து வழக்கு சொத்தினை என் முன்னிலையில் அளந்தும் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் வரைபடத்தினை எனது வழக்கறிஞர் படித்துக் காட்டி தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. மேற்படி அறிக்கையில் வழக்கு சொத்தில் ஏற்கனவே இருந்த சர்வே எண் 782/13 என்பது புதியதாக மாற்றம் செ ய்யப் பட்டு சர்வே எண் 782/27 என மாற்றப்பட்டும் அது செல்வமணி பெயரிலும் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். மேற்படி அறிக்கையின் அடிப்படையில் வாதியானவர் வழக்கு சொத்தின் சர்வே எண்ணை திருத்தம் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அறிக்கையில் சர்வே எண் 782/27ல் நான் வாதிக்கு சொந்தமான இடத்தில் ஆர்.சி.சி மாடி வீடு கட்டி அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. மேற்படி விவரத்தை நான் எனது நீதிமன்ற அறிக்கையின் ஆட்சேபணையில் மறுக்கவில்லை என்று சொன்னால் மறுத்துதான் தெரிவித்திருக்கிறேன்.

3. அதேபோல் செல்வமணிக்கு உள்ள சர்வே எண் 782/27 முழு சொத்தையும் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள பட்டாவின் சான்றிட்ட நகலில் சர்வே எண். 782/27 என்றும் பட்டா எண். 738 ஆனது கோபால் மகன் செல்வமணி பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி பட்டா கொடுக்கப்பட்டுள்ள இடத்தைதான் நான் ஆக்கிரமித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அது என்னுடைய மூதாதையர் சொத்தாகும். நான் வழக்கு தாக்கல் செய்த 1 1/2 வருடங்களுக்கு முன்புதான் வழக்கு சொத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளேன் என்று சொன்னாலும் வழக்கின் வாதி வெளியூறுக்கு சென்றிருப்பதனை நான் அனுகூலமாக வைத்து வழக்கு சொத்தை ஆக்கிரமித்துள்ளேன் என்று சொன்னாலும் அதனால் இந்த வழக்கை வாதி கேட்கும் பரிகாரத்தை அளிக்க தகுதியுடையவர் என்று சொன்னாலும் சரியல்ல.

4. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல. கோபால் என்பவரின் சொத்து தனிப்பட்ட சொத்து. அவருக்கு என்று தனியாக பத்திரம் உள்ளது. நான் யாருடைய நிலத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. கோபால் என்பவருக்கு தனியாக பத்திரம் உள்ளது என்று நான் சொல்வதுபோல் அதற்கான ஆதாரம் ஏதேனும் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு ஆவணங்கள் ஏதேனும் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது.**

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாாத்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2025.11.03 17:49:18 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
செய்யாறு